# ரமண சத்குரு

ரமணன் மெய்குரு. ரமணன் மெய்குரு ரமணன் மெய்குரு ராஜன்.

1. பொன் உலகில் (மேரு மலையில்) வாழும் தேவர்களும் போற்றி புகழ்கின்ற சிறந்த சிவ க்ஷேத்திரமான திருச்சுழியில் வந்து பிறந்த, அருள் வடிவானவன் எங்கள் ரமண சத்குரு தேவன்.

2. அழகம்மை-சுந்தரம் தம்பதியரின் அன்புச் செல்வமாகப் பிறந்து அமுதக் கடல்போல் அருணகிரி க்ஷேத்திரத்தில் வசிப்பவன். நாமரூபமற்ற பரம்பொருளே முன்னர் மான் மழுக் கொண்ட விடைப்பாகனாக(சிவனாக)த் தோன்றியது போல், தற்போது அருளுருக் கொண்ட ரமணனாக வடிவிலா வடிவுடன் வீற்றிருக்கிறான்.

3. தூய ஞானப் பெருங்கடலாகிய ஸ்ரீ ரமணன், திருவண்ணாமலையில் தூய்மையே உருவாகி வந்து, சிறந்த விருபாக்ஷ குகையில் வீற்றிருக்கின்றான்.

4. வாதம் செய்கின்ற மாயையைச் சூழ்ந்து வளைத்து நின்று மிதித்தவன் எங்கள் ஸ்ரீ ரமணன். சூது செய்து அழிக்கும் ஐம்புலன்களால் உருவான வினைகள் யாவும் நீங்கப் பெற்றவன் எங்கள் ஸ்ரீ ரமண சத்குரு.

ஸ்ரீ

# ரமணஸத்குரு

ரமண ஸத்குரு ரமண ஸத்குரு
ரமண ஸத்குரு ராயனே;
ரமண ஸத்குரு ரமண ஸத்குரு
ரமண ஸத்குரு ராயனே.

1. புகழும் பொன்னுல கத்து வானவர்
போற்றி நின்று புகழ்ந்திடும்;
திகழு நன்னில மாந்தி ருச்சுழி
தன்னில் வந்த தயாபரன். (ரமண)

2. அழகு சுந்தர ரன்பி னில்வரு
மமுத வாரிதி யருணையான்;
மழவி டைப்பொரு ளருள்ப டைத்திடு
வடிவி லாவடி வானவன். (ரமண)

3. அமல ஞான வருட்பெ ருங்கட
லருணை யங்கிரி தன்னிலே;
விமல மேயுரு வாகி வந்தொரு
விருப நற்குகை மேவினான். (ரமண)

4. வாது செய்திடு மாயை தன்னை
வளைத்து நின்று மிதித்தவன்;
சூது செய்புல னோடு வஞ்சகச்
சூழ்வி னைத்தொகை யற்றவன். (ரமண)

5. அருணாசல ஈசுவரனால் அன்புடன் அணைத்து வளர்க்கப்பட்டவன், எனதன்பிற்குரிய ஸ்ரீ ரமண குருநாயகன். அவன் கருணையே உருக்கொண்டு கேட்டதைத் தரும் கற்பக மரம் போல் விளங்குகின்றான்.

*5. அருணை யீச னெடுத்த ணைந்திடு*
*மன்ப னென்குரு நாயகன்;*
*கருணை யேவடி வாக நின்றிடு*
*கற்ப கத்தரு வாகினேன்.* *(ரமண)*

6. மூன்று விதமான தேகங்களாகிய ஸ்தூல, சூக்ஷ்ம, காரண தேகங்களை மறந்தவன். சத்-சித்-ஆனந்தமாகிய மூன்று பதங்களில் நிரந்தரமாகி, இந்த ஸ்தூல உலக வாழ்வில் மயக்கம் கொள்ளாது இறை சொரூபமாக தோன்றியிருக்கின்றான் எங்கள் சத்குரு ரமணன்.

*6. மூன்று தேக மறந்து முப்பத*
*வாழ்வி னிற்குடி யேறினன்;*
*தோன்று மிச்சக வாழ்வி னிற்களி*
*யாது நின்றிடு தோன்றலான்.* *(ரமண)*

7. உடலெடுத்த ஜீவனாகத் தோன்றினாலும், பிரமாண்டங்களைக் கடந்து பர ஸ்வரூபனாகத் தன்னை உணர்ந்து நின்று, அப்பரமாத்ம சொரூபமாகவே கனிந்து, உள்ளே ஒன்றி, அனைத்தையும் ஏகாத்ம சொரூபமாகவே கண்டு ஆனந்தம் கொண்டவன் எனது சத்குருநாதன் ஸ்ரீ ரமணன்.

*7. பிண்ட மேவிய நாதனே பிர*
*மாண்ட மேவிய நாதனய்க்;*
*கண்டு நின்று கனிந்து ளேகமே*
*காட்சி யாய்க்களி கொண்டவன்.* *(ரமண)*

8. என் சத்குரு ஸ்ரீ ரமணன் பொன்நிறம் கொண்ட வடிவினன். புகழ்மிக்க சிவந்த சடையுடைய சிவனும் அவனே. எனக்கு நல்ல சத்குருவாக வாய்க்கப் பெற்று பர தத்துவத்தின் பொருளாக திகழ்பவனும் அவனே.

*8. பொன்னி றந்தவழ் மேனி யன்புக*
*ழோங்கு செஞ்சடை வேணியன்;*
*தன்ன ருங்குரு வாக வாய்த்திடு*
*தத்து வப்பொரு ளானவன்.* *(ரமண)*

9. பஞ்ச பூதங்கள் (அப்பு, வாய், தேயு, பூமி, ஆகாயம்) யாவிலும் எனது சத்குரு ஸ்ரீ ரமணன் நிறைந்து இருப்பவன். அவன் பஞ்ச கோசங்கள் (அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்கள்) இல்லாத ஆத்ம சொரூபன். துதித்திடும் அன்பர்களின் துன்பங்களை அழித்து ஞானம் தருபவன்.

*9. பஞ்ச பூத நிறைந்து நின்றவன்*
*பஞ்ச கோசம தற்றவன்;*
*அஞ்ச லித்திடு மன்பர் துன்ப*
*மொழிக்கு ஞான விதாயகன்.* *(ரமண)*

10. முக்குணங்களால் (சத்வ, ரஜஸ், தமஸ்) ஆன தடைகளை களைந்தெறிந்தவன். முழுமுதற் பொருளும் நிர்மலனுமான தேவன் அவன். பக்குவம் அடைந்த பக்தர்கள் வந்து நின்று பணி செய்கின்ற திருப்பாதங்களை உடையவன்.

*10. முக்கு ணத்தடை யற்ற வன்முத*
*லாய தேவ னிராமயன்;*
*பக்கு வத்தவர் வந்து நின்று*
*பணிந்தி டும்பத சேவையான்.* *(ரமண)*

11. ஆதியான காரண-காரியம் அறிந்த அறிவுமயமான முழுமுதற் பொருள் ஸ்ரீ ரமண சத்குரு. துன்பமே செய்கின்ற மலமாயையை வதைத்து அழித்து வீசிடும் எமன் போன்றவன்.

*11. ஆதி காரண காரி யங்க*
*ளறிந்த சின்மய பூரணன்;*
*வாதி யாமல மாயை தன்னை*
*வதைத்து வீசிடு மாரணன். (ரமண)*

12. எங்கள் சற்குரு ரமணன் தேவர்கள் யாவரும் வந்து நின்று துதிக்கும்படியான பற்பல சிறப்புகளை உடையவன். அன்பர்களுக்கு காவலாக இருப்பவன். உண்மையாம் ஞான நாட்டின் அரசாக நிற்கின்ற மூல காரணனும் அவனே.

*12. தேவர் யாவரும் வந்து நின்று*
*துதித்தி டும்பத வைபவன்;*
*காவ லாகிமெய்ஞ் ஞான நாட்டர*
*சாக நின்றிடு காரணன். (ரமண)*

13. வேதத்தின் தலைவன். வேதங்களை ஆபரணமாகப் பூண்டவன். வேதமே வடிவானவன். விருப்பமோடு பரவாழ்வில் விரைந்து ஏறிச்சென்று களித்தவன் எங்கள் சத்குரு ஸ்ரீ ரமணன்.

*13. வேத நாயகன் வேத பூஷணன்*
*வேத மேயுரு வாயவன்;*
*காத லாய்ப்பர வாழ்வி னிற்கடி*
*தேறி நின்று களித்தவன். (ரமண)*

14. துரிய வடிவானவன், தூயவெளியாகிய இறைவன் விளங்குவதற்கு மேடை போன்றவன். அரியதான ஏழு உலகும் அண்டமும் கலந்து நின்றாலும் கலப்பில்லாத தூயவன் எங்கள் சத்குரு ரமணன்.

*14. துரிய மேவடி வாகித் தூவெளி*
*யாட ரங்கம தாகினோன்;*
*கரிய தாய்ச்சக மேழொ டண்டங்*
*கலந்து நின்ற கலப்பிலான். (ரமண)*

15. சின்மயமாகிய மரத்தில் பழுத்த இனிய கனியின் சுவை போன்றவன். தன்மய பொருளானவன். ஒன்றானவன். அளவாகிய ஆனந்தமானவன் எங்கள் சத்குரு ரமணன்.

*15. சின்ம யத்தரு விற்ப ழுத்திடு*
*தீங்க னிச்சுவை யாகினோன்;*
*தன்ம யப்பொரு ளாய்த்த னித்திடு*
*சச்சி தானந்த மாகினோன். (ரமண)*

16. நீரில் கரைத்த உப்பைப்போல் என் மனக் குகையில் ஒன்றாகி கலந்து நின்று உயர்ந்தவன். தந்தை போன்றவன். தாய் போன்றவன். அற்புதமான பொருளைப் போன்றவன் எங்கள் சத்குரு ரமணன்.

*16. அப்பி லுப்பென வென்ம னக்குகை*
*யொப்பி நின்றிடு மண்ணலான்;*
*அப்ப னைப்பவ னன்னை யொப்பவ*
*னற்பு தப்பொரு ளானவன். (ரமண)*

17. விழிப்பு, கனவு, தூக்கம் முதலிய துன்பங்கள் அற்றவன். வாக்கினால் கூற முடியாதபடி நிறைவாக விளங்கும் மகா வாக்கியங்களின் பொருளாக இருப்பவன் எங்கள் சத்குரு ரமணன்.

17. ஜாக்கி ரங்கன வோடு சாற்று
சுழுத்தி வாதைய தற்றவன்;
வாக்கி றந்து நிறைந்து நின்றதோர்
வாக்கி யப்பொரு ளானவன். (ரமண)

18. அழியாது விளங்கும் வேதப்பொருளானவன். ஜாதி, பேதம் அற்றவன். ஆதியந்தமற்றவன். நிர்மல மனமுடையவன். ஞானத்தின் தலைவன். பக்தியுள்ளத்தில் ஜோதி சொரூபமாக பிரகாசிப்பவன எங்கள் சத்குரு ரமணன்.

18. ஸநாத னப்பொரு ளான வேதியன்
ஜாதி பேதம தற்றவன்;
அநாதி நின்மல ஞான நாயக
னன்பி னில்வரு ஜோதியான். (ரமண)

19. நல்ல குணக்கடலான நற்குண வடிவினன். நல்லோர் புகழும் மெய்யுணர்வு வடிவானவன். அற்புதச் சுவை பொருந்திய பாகு போன்றவன். 'தத்துவமஸி' வாக்கிய வடிவமானவன் எங்கள் சத்குரு ரமணன்.

19. சற்கு ணக்கட லான நற்குணன்
சற்ச னர்புகழ் நீதியான்;
அற்பு தச்சுவை யான பாகின
னசிப தத்துரு வானவன். (ரமண)

20. பக்தியோடு பணிந்து நிற்கின்ற பக்தகோடிகளை முக்தியாகிய உண்மையின் கரையைக் காட்டி (அடிப்படையான) மெய்ஞ்ஞான அறிவை யாவரும் பெற்றிட, கொடிகட்டி நிற்பவன் எங்கள் சத்குரு ரமணன்.

20. பக்தி யோடு பணிந்து நின்றிடு
பக்த கோடியர் தங்களை;
முக்தி மெய்க்கரை காட்டி மூதறி
வுற்றி டத்வஜ மிட்டவன். (ரமண)

21. ரமணனே! சற்குருவே! செய்யக்கூடிய செய்கையை செய்யத் தூண்டுகிற இந்திரியங்களில் வீழ்ந்து வலிமையற்ற எனது மனப்பேயை வாவென்று அழைத்து என்னை ஆள்வாயாக!

21. அடாத செய்கை யளிக்கு மிந்திய
வஞ்ச னைப்பொறி வாயிலில்;
விடாது வீழ்ந்து விளிக்கு மென்மனப்
பேயை வாவென வாளுவாய். (ரமண)

22. மாளும் இவ்வுடலே நான் என்ற பாவனையினால், இந்த அகங்காரம் என்னும் ஆணவத்தில் வீழ்ந்து கிடக்கும் பாவியை, உனது உயர்ந்த ஞான வாளால் தண்டிப்பீர். தூய மணிச்சுடரான ரமண சத்குருவே!

22. அங்க மேறி யகங்க ரித்திடு
மாண வப்படு பாவியைத்;
துங்க ஞானவாள் கொண்டு சாடுவீர்
தூம ணிச்சுட ராகினீர். (ரமண)

23. சூரிய வம்சத்து தோன்றிய ராமனும், தாமரையில் வாழும் பிரம்மனும், மான், சூலாயுதம் தரித்த மேன்மைமிகு சிவனும், மாதவம் செய்யும் குமரனும் எங்கள் சத்குரு ரமணனே ஆவான்.

*23.* பாநு வம்ச விநோத ராமனும்
பங்க யப்பெரு வாழ்வனும்;
மானுஞ் சூல மணிந்த தேவனு
மாத வக்கும ரேசனும். (ரமண)

24. போற்றினேன், என் மனக் கோயிலில் விளங்கும் புண்ணிய வடிவானவா! நின்முகம் போற்றி. நின்மனம் போற்றி. போற்றி நின் பாதம். ஐயனே!

*24.* போற்றி யென்மனக் கோயி லுற்றிடு
புண்ணி யத்திரு மேனியாய்;
போற்றி நின்முகம் போற்றி நின்மனம்
போற்றி நின்பத மையனே. (ரமண)

25. (அருகில்) விரும்பி நின்று உனது புகழ்பாடும் வேங்கடரமணனாகிய என் நாவிலும் விளங்கும் ரமணரே! பொருத்தமான சுவையான உனது திருப்பதங்களை என்தலை உச்சியில் வைத்திட வேண்டினேன். அருள்க.

*25.* நச்சி நின்று நவிற்று வேங்கட
ரமண ஞவிலு மேவிய;
உச்சி தச்சுவை யான வுன்பத
முச்சி வைத்திட வேண்டினேன். (ரமண)

ஸ்ரீ ரமண ஸ்துதிபஞ்சகம்
முற்றிற்று